சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.25/2024**

வாதி தரப்பு சாட்சி வா.சா.4 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. பாலசுப்ரமணியன் | த/பெ: வேம்பு |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 26.03.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் சாட்சி கையொப்பம் போட்ட ஆவணம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டதுஎன்று தெரியாது. நான் சாட்சி கையொப்பம் போட்ட ஆவணத்தை நான் படித்துபார்க்கவில்லை, அவர்கள் பேசிக்கொண்டார்கள். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்தின் சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் 277 குழியாகும். நான் சாட்சி கையொப்பம் போட்ட ஆவணத்தில் பிரதிவாதியும் கையொப்பம் போட்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிரதிவாதி பாரூக் கையொப்பம் உள்ளது என்றால் எனக்கு பாரூக் கையெழுத்து எப்படி இருக்கும் என்று தெரியாது. எனது கையொப்பத்திற்கு பின்னிட்டு முகவரி எழுதவில்லை என்றால் சரிதான். நானும் வாதியும் ஒரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். இருவரும் உறவினரா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் யார் பெயரில் எழுதப்பட்டது என்றால் பரமேஸ்வரி பெயரில் எழுதப்பட்டது. சிங்காரவேல் பெயரில் எழுதப்பட்டதா என்றால் என்னவென்று எனக்கு

தெரியவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட பின்னிட்டு பிரதிவாதி இரண்டு தவணைகளில் வாதியிடம் பணத்தை திரும்ப செலுத்திவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சிங்காரவேல் அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். சிங்காரவேல் என் ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.